(25)

இராஜகோபுரமும் சங்கப்பலகையும்

பொற்றாமரைக் குளத்துப் படித்துறையில் அமர்ந்திருந்தார் கீரர். கண்கள் நீரை, நீரில் காற்று மோதுண்டு எழுப்பிய அலைகள் படிப்படியாய்ப் பரவி கரையில் பட்டுச் சிதறி உடைவதை வெறித்துக் கொண்டிருந்தன.

மனமோ கருத்து வலை பின்னிக் கொண்டிருந்தது. சிருஷ்டி ரகசியத்தையே அந்தக் குளம் அவருக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருப்பதாகப்பட்டது. நீர், அலையைக் கருக்கொள்வது தான் சிருஷ்டியா? அலைகள் வட்ட வட்டமாக உருண்டு திரண்டு உருக்கொள்வதுதான் வாழ்வா? கரையில் மோதி உடைந்து சிதறுவதுதான் மரணமா? மரணம் இல்லாமல் போவதா? உடைந்த அலைகள் மீண்டும் குளத்துக்குள்ளேயே ஐக்கியமாகி, புதிய அலையாய்ப் பரிணமிக்கிறதே. எனில் மரணம் முற்றுப்புள்ளியல்ல. உறங்குவது போலும் மரணம். உறங்கி விழிப்பது போலும் ஜனனம்.

'பெருமான் நக்கீரருக்கு வணக்கம்' என்றது ஒரு குரல்.

கருத்து வலை அறுபட நிமிர்ந்தார் கீரர். அந்திக் கால பூஜைக்கு வந்த யாரோ ஒரு பக்தர், கீரரின் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு நகர்ந்தார்.

நேற்றிலிருந்துதான் இந்தத் தொந்தரவு அவருக்கு அதிகரித்தி ருந்தது. கடவுளே நேரில் வந்து அவரிடம் விளையாடி விட்டுச் சென்றதாக மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்கள். எனில், அவர் தான் எவ்வளவு பெரியவர்? என்ன சொல்லித் தொழுதார், அந்தப் பக்தர்? 'பெருமான் நக்கீரருக்கு வணக்கம்' என்றா?

கீரருக்குச் சிரிப்பு வந்தது. இந்த மனிதர்களுக்கு யாரையாவது தொழுது கொண்டே இருக்க வேண்டும். பிறரால் தொழப்படும் நிலைக்குத் தன்னை ஏன் இவர்கள் உயர்த்திக் கொள்வதில்லை. தொழுவதற்கு என்றே மாபெரும் கோயில்.

அவர் கண்ணில் இராஜகோபுரம் விழுந்தது. உயரங்களைக் காட்டும் சின்னம். கீழே பள்ளத்திலிருந்த குளத்து நீரைப் பார்த்தார். சங்கப் பலகை மிதந்து கொண்டிருந்தது. புலமையின் எடைக் கல். தலை கனத்துப் போய் வருகிற புலவர்களின் தருக்கை அடக்க வென்றே இறைவன் அருளிய தராசு. தாமரை இலை போல, அலைகளின் ஊடே தத்தளித்த அந்தப் பலகையின்மீது தவளை ஒன்று ஏறி அமர்ந்தது.

நரையோடிய தாடியை நீவி விட்டுக் கொண்டார் கீரர்.

நேற்றுக் காலையில் தான் அந்த விளையாட்டின் தொடக்கமே நிகழத் தொடங்கிற்று. அந்தப்புரத்திலிருந்து ஒரு சேவகன் வந்து மன்னர் கீரரைக் கையோடு அழைத்து வரச் சொன்னதாக அறிவித்தான்.

“அந்தப்புரத்துக்கேவா?” என்றார் கீரர்.

“ஆம்” என்றான் வந்தவன். அவருக்கு யோசனையாகி விட்டது. ஞானமும் கல்வியும் கோலேச்சும் தமிழ்ச் சங்கத்துக்கு வரச் சொல்லி இருந்தால், கீரர் உடனே புறப்பட்டிருப்பார். அந்தப்புரமோ, மன்னன் இருக்க மன்மதன் ஆளும் இடம் ஆயிற்றே! எனினும் கீரர் புறப்பட்டார்.

அந்தப்புரத்தின் வசந்த மண்டபத்துக்கே கீரர் அழைத்துச் செல்லப்பட்டார். மன்னன் செண்பக பாண்டியனும் அரசி பூங்குழலியும் அங்குதான் இருந்தார்கள்.

கீரரைப் பார்த்ததும் செண்பக பாண்டியனின் முகம் வெளிச்சமுற்றது.

“தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவரே! எனக்கு ஒரு சந்தேகம். தாங்களே அதைத் தீர்த்து வைக்க வேண்டும்—”

“சொல்லுங்கள். சந்தேகம் இலக்கணத்திலா அல்லது இலக்கியத்திலா?”

‘யதார்த்தத்தில். பெண்கள் கூந்தலுக்கு இயற்கையாகவே மணம் ஏற்பட்டு விடுமா? அன்றிச் செயற்கையாகவா?’

கீரரின் மனம் துணுக்குற்றது. தேரிழுக்கச் சென்றவன் வழி தவறி தாசி வீட்டுக்குள் நுழைந்ததைப் போல ஒரு தடுமாற்றம். அரச தம்பதிகளை ஆழ நோக்கினார் கீரர். ஆடிக் களைத்திருந்தார்கள்

அவர்கள். மன்னனின் மேனியிலிருந்து சந்தனமும் முல்லையும் வீசியது. பூங்குழலியின் கூந்தல் விரிந்து காற்றில் பறந்து கொண்டிருந்தது. சந்தேகம் என்ன? மன்மதன் கொடிதான். அவரை நோக்கி வீசப்பட்ட வினா, இருவருக்கும் இடையில் கிடந்தது. கணத்தில் தன்னைத் தெளிவுபடுத்திக் கொண்ட நக்கீரர் சொன்னார்.

'மன்னவா! மகளிர் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை. மலர்களும், தைலங்களுமே மணம் ஊட்டுகின்றன.'

'எல்லாப் பெண்களுக்குமே இந்த விதிதானா புலவரே'

'கர்ப்பவாசம் செய்து, ஊனும் உயிருமாக மண்ணில் தோன்றிய மகளிர் அனைவருக்கும் இதுவே விதி'

அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டார் நக்கீரர்.

⮝ ⮟ ⮝

தன் பதில் பாண்டியனுக்குத் திருப்தி தரவில்லை என்பதைப் பிறகே அவர் அறிந்து கொண்டார். ஆயிரம் பொற்காசுகள் போட்டி ஒன்றையும் மன்னன் அறிவித்துவிட்டான். எழுத்தையும் சொல்லையும் அகத்தையும் புறத்தையும் ஆராய்ந்து கற்ற தனக்கு முன் விடலைத்தனமான கேள்வி ஒன்று அலட்சியமாக வீசி எறியப் பட்டதை நினைத்து மனம்நொந்தார். மேதைகளும், புலவர்களும் கவிஞர்களும் போட்டுக் கொண்ட அறிவார்ந்த சிடுக்குகளையே இதுவரை அவிழ்த்துப் பழக்கப்பட்ட தமிழ்ச் சங்கம், பெண்களின் ஈறுகளையும் பேன்களையும் ஆராயும் காலம் வந்ததே என்கிற விசனம் அவருக்கு நேர்ந்தது. ஏதோ ஒரு யுகத்தின் வீழ்ச்சி தன் காலத்தில் தொடங்கி, அந்த வீழ்ச்சிக்குத் தான் சாட்சியாக இருக்க நேர்ந்தமைக்கும் அவர் வருந்தினார். அநுபவம் அவரை, ஊசி போகும்வழி நூலாக இருந்துவிடு என்று உபதேசித்தது. ஊர் இருட்டை தன் ஒற்றை விளக்கா விரட்டும் என்றுதான் நினைத்திருந்தார். இருந்தவரை, நேற்று மாலை வந்தவன் அலைக்கழித்து விட்டானே.

வந்தவன் நெருப்பாய் நின்றான். அரியும் அயனும் காண ஏலாத அந்தப் பழைய நெருப்பு மானுட அவதாரம் கொண்டு வந்து நின்றது அவர்முன். மூன்றாம் கண்ணை அவன் மூடி நின்றாலும், அனல், சாம்பலுக்குள் இருக்கும் அக்கினிக் குஞ்சு மாதிரி தகிக்கவே செய்தது.

'கீரரே! பெண்கள் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை என்பதுதான் உமது கட்சியா?'

'கட்சி இல்லை. கருத்து.'

'உத்தம ஜாதிப் பெண்களுக்குக் கூடவா?'

'பெண்களுக்குள் மத்திமமும் உத்தமமும் பிறப்பால் வருவ தல்லவே! வளர்ப்பால் வருவது. பிறப்பால் இயற்கையால் யார் கூந்தலுக்கும் மணம் இல்லை.'

'இதற்கு என்ன ஆதாரம்.'

'என் வாழ்க்கை அனுபவங்களும், அனுபவம் தந்த ஞானமுமே ஆதாரம்.'

'நீர் எம்மைவிட எல்லாம் அறிந்தவரோ?'

முப்புரம் எரித்த நெருப்பு எந்த நேரத்திலும் பற்றிக் கொள்ளும் பதற்றத்தில் இருந்தது. உண்மையைப் பற்றிக் கொண்டு, மெய்யை ஸ்தாபனம் செய்யும் தர்ம ஆவேசத்தில் இருந்த நக்கீரருக்கு மடியில் கனம் இல்லை. ஆகவே நெஞ்சில் பயமும் இல்லை.

'எல்லாம் அறிந்தவர் எவரும் இருந்துவிட முடியாது. கற்றது கைம்மண் அளவே. கல்லாதது உலக அளவு.' வந்தவன் ஏளனமாய்ச் சிரித்தான். சம்ஹாரக் கடவுளாகிய தன்முன், மரணத்தின் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் முதியவன் வார்த்தை விளையாட்டு ஆடு கிறானே என்று இருந்திருக்கும் போலும். அதே நேரத்தில் உண்மை தன் பக்கம் இல்லை என்கிற எரிச்சலும், அதன் காரணமாய்த் தோன்றிய கோபமும் அவனுக்குள் எழுந்தன. இனி தன்னை வெளிப் படுத்தித்தான் தன்னை மீட்டுக் கொள்ள வேண்டும் என்றும் அவனுக்குத் தோன்றியது. நெற்றிக் கண்ணின் இமை லேசாகத் திறந்தது. சுண்ணாம்புக் காளவாயின் மேல் நிற்பது போல் இருந்தது கீரருக்கு. தர்ம வழி சென்ற தலை மேலும் நிமிர்ந்தது.

> 'உலகமா? அது நான் கோத்து அணிந்திருக்கும் என்
> மாலையில் ஒரு மணி. இந்தப் பிரபஞ்சமே என்னுள்
> அடங்கும். என் வார்த்தைக்கா எதிர் வார்த்தை?'
> அவன் மூன்றாம் கண் மேலும் சற்றே திறந்தது.

வார்த்தைகள் புகையோடு வெளிவந்தன. அக்கினிக் குண்டத் துக்குள் நின்று கொண்டிருப்பதாய்ப் பட்டது கீரருக்கு. ஆடைகள் கருகின. மேனிமேல் முளைத்திருந்த முடிகள் கருகின. தீயின்நாக்கு அவரை உரசிற்று.

> 'புலவரே! நீரே முக்கண் வள்ளலாயினும் ஆகுக. சொக்க
> வைக்கும் அழகுடைய சொக்கநாதர் நீர் என்பதை நான்

அறிவேன். இருந்தும், நீர் நெற்றிக் கண்ணைத் திறப்பி னும், என்னையும் இம் மதுரை மண்ணையும் நீராய்ச் சுட்டு எரிப்பினும் நீர் சொல்வது குற்றமே. என் கருத்து உண்மையே...'

நம்பிக்கையின் அஸ்திவாரத்தின் மேல் நின்று தர்க்கித்தவன் அது பொய்யென ஸ்தாபனம் ஆக, சபையில் ஆடை இழந்தவன் போல் ஆனான். ஆயினும் என்ன? அறிவு உண்மையை அது எங்கிருந்து வந்த போதிலும் இருகை நீட்டி எதிர்கொள்வது தானே இயல்பு. வந்தவனோ அதை முற்றும் இழந்திருந்தான். சிருஷ்டிக் கடவுளின் தலையைக் கொய்து எறிந்தவன் கை பரபரத்தது. அதைச் செய்திருக்கலாம் மீண்டும். அதனினும் சிறியன செய்தான், முப்புரி நூல் அணிந்த சிவன்.

'கீரனே... அங்கம் புழுதிபட, அரிவாளில் நெய்பூசி, பங்கம்பட இரண்டு காலையும் பரப்பி, சங்கைக் கீர் கீர் என்று அறுக்கும் ஜாதியில் பிறந்த நீயா என் கவிக்குக் குற்றம் காணத் தக்கவன்?'

தமிழ்ச் சங்கத்தின் ஆய்வு மண்டபம் முதல் முதலாய்க் கறைபட்டது—

▲ ▼ ▲

ஞானத்தின் நிறமே என வெள்ளை நுரையாய் வெளுத்த தாடியை நீவி விட்டுக் கொண்டார் கீரர்.

இருட்டிவிட்டிருந்தது. குளத்து நீரும் கறுத்து — விட்டிருந்தது. கோபுரத்து உச்சியில் இருந்த தீபம் நீரில் விழுந்தது போல உள்ளிருந்து நெளிந்தது.

'தொபுக்'கென்று கல் ஒன்று குளத்தில் விழுந்தது. திரும்பிப் பார்த்தார் கீரர். சிறுவன் ஒருவன் கைதட்டி மகிழ்ந்து கொண்டி ருந்தான். குளத்தில் வட்டம் வட்டமாய் சுழன்றது அதிர்வுகள்.

கீரர் எழுந்தார். தடியை ஊன்றி நடந்து பிராகாரத்துக்கு வந்தார். சந்தி பூஜை நடந்து கொண்டிருந்தது. இறைவன் திருஉரு வைப் பார்த்தார். ஏனோ குளத்தில் கல்லெறிந்த சிறுவன் நினைவு எழுந்தது. தீப ஆராதனை தொடங்கும் முன்பே திரும்பி எதிர்த் திசையில் நடந்தார்.

1984